# மூன்றாம் பருவத் தொகுத்தறித் தேர்வு - 2024

## ஏழாம் வகுப்பு

நேரம்: 2.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 60

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 4×1=4**

1) மரம் வளர்த்தால் ________ பெறலாம்

அ) மாரி ஆ) மாறி இ) காரி ஈ) பாரி

2) உழவர் சேற்று வயலில் ________ நடுவர்

அ) செடி ஆ) பயிர் இ) மரம் ஈ) நாற்று

3) திருநெல்வேலி ________ ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

அ) காவிரி ஆ) வைகை இ) தென்பெண்ணை ஈ) தாமிரபரணி

4) காயிதே மில்லத் ________ பண்பிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார்

அ) தண்மை ஆ) எளிமை இ) ஆடம்பரம் ஈ) பெருமை

**ஆ) பொருள் தருக. 2×1=2**

5) வையம்

6) சாந்தம்

**இ) பிரித்து எழுதுக 2×1=2**

7) ஞானச்சுடர்

8) இன்சொல்

**ஈ) பொருத்துக:- 4×1=4**

9) அன்பு - அறுத்தல்

10) ஆர்வம் - வன்சொல்

11) கதிர் - நெய்

12) களை - தகளி

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5×2=10**

13) பாரி மகளிரின் பெயர்களை எழுதுக?

14) உழவர்கள் எப்போது நண்டுபிடித்தனர்?

15) தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?

16) பொருள் ஈட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?

17) ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும்?

18) விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.

19) இரட்டைக்கிளவி என்பது யாது?

www.Padasalai.Net
Scanned with CamScanner

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com



3×4=12

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக:-

20) உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக?

21) திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

22) இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?

23) ஒப்புரவுக்கு அடிகளார் தரும் விளக்கம் யாது?

24) உருவக அணிக்கும், ஏகதேச உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?

4+2=6

IV. பின்வரும் மனப்பாடப் பகுதியை அடிமாறாமல் எழுதுக:-

25) அ) இன்சொல் விளை .... எனத் தொடங்கும் முனைப்பாடியார் பாடல்

ஆ) பிறப்பொக்கும் .... எனத் தொடங்கும் திருக்குறள்

4×2=8

V. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:-

26) பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக

அ) திருவள்ளுவரின் புகழை ______ உலகமே அறிந்துள்ளது.

(எலியும் பூனையும் போல / உள்ளங்கை நெல்லிக்கனி போல)

ஆ) சிறுவயதில் நான் பார்த்த நிகழ்ச்சிகள் ______ என் மனதில் பதிந்தன

(கிணற்றுத் தவளை போல / பசுமரத்தாணி போல)

27) கலைச்சொல் தருக: அ) வறுமை ஆ) அறுவடை

28) வினாச் சொல்லை இட்டு நிரப்புக

அ) ______ சொற்களைப் பேச வேண்டும்

ஆ) முதல் ஆழ்வார்கள் ______ பேர்

29) சரியான இணைப்பு சொல்லால் நிரப்புக

(ஆகையால், அதுபோல, இல்லை என்றால்)

அ) பிறருக்குக் கொடுத்தலே செல்வத்தின் பயன் ______ பிறருக்குக் கொடுத்து மகிழ்வோம்

ஆ) நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும் ______ துன்பப்பட நேரிடும்

VI. ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்க:- 1×6=6

30) "உண்மை ஒளி" கதையைச் சுருக்கி எழுதுக

31) "பயணம்" கதையைச் சுருக்கி எழுதுக.

VII. ஒரு பக்க அளவில் விரிவாக எழுதுக:- 1×6=6

32) திருவிழாவைக் காண வருமாறு உறவினருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது) "என்னைக் கவர்ந்த நூல்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

********

Scanned with CamScanner

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com